**தலைப்பு 26 – தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல் அறியும் உரமைகளுக்கான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) தகவல் அறியும் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதியான கட்டுநிதி திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி யில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் பணமும் பணத்துக்கு சமமானவைகளும் என ரூபா 937,541 தொகை பதியப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதி நிலைமைக் கூற்றில் பணமும் பணத்துக்கு சமமான வைகளும் என ரூபா 937,541.41 தொகை நாம் பதிவு செய்வதற்கு காரணம் கணக்குகள் தயாரிக்கும் போது திறைசேரிக் கணக்கு மீதிக்கு இணங்கக் கூடியவாறு கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டிய இருந்ததனாலே. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆணைக் குழு வினால் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 178,411 ஆகும். | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | மேற்கூறிய கொடுப்பனவு 12/31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்பட்ட பொறுப்புக் கள் என நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியவை என ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் அந்தக் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை கள் தொடர்பான சட்டத்தின் பிரிவுகள் 11(2) மற்றும் 16(1) | ஆணைக்குழுவிற்கு அங்கேயே நிதியம் ஒன்று இருக்க வேண்டியதுடன் ஆணைக்குழுவின் அதிகாரம் கருமங்கள் மற்றும் செய்பணிகள் செயற்படுத்தும் போது மேற்கொள்ளப்படும் செலவுகள் அந்த நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டும். அவ்வாறாயினும், ஆணைக்குழு, விஷேட செலவு அலகு ஒன்றென கணித்து ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறான நிதியம் ஒன்று நிறுவி இருப்பத ற்கான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திறைசேரியுடன் மேலும் கலந்துரையாடி, ஆணைக்குழு நிதியம் நிறுவுவதற் காக நடவடிக்கை எடுப்பேன் என அறவிக்கின்றேன். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) | நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ஆணைக்குழுவினால் அந்த செயலாற்றல் அறிக்கை இதுவரை சமர்ப்பித்திருக்கவில்லை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள்/ கணக்குக் கூற்றுக்கள் முதற் தடவையாக சமர்ப்பி க்கப்பட்டதனால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் தாமதம் ஆகியது. அடுத்த வருடத்தில் இந்தக் குறைபாடு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வு முறையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்ச்சியான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை பயன்தரும் விதத்தில் நடாத்திச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் நடாத்தப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆணைக்குழுவினனால் அந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக இயன்றவாறு வழமையாக மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இந்த மீளாய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் மாத்திரம் நடைபெறவில்லை. |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் தேவையான நேரத்தில் தயாரிக்கப்படல் நேரிடும் என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், மேலதிகமாக கணக்காய்வு செய்யும் நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருப்பதுடன், அறிக்கையின் 3.1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத் திற்கு சமர்ப்பிக் கப்பட வேண்டும். | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஆணைக்குழு 2016 ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்டதால் 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள்ளகக் கணக்காய்வு கடமைகளை உரிய முறையில் செயலாற்றுவதற் காக ஆக்கபூர்வமான நடைமுறை ஒன்று காணப்படுவது என்பதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோக்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அறிக்கையின் 4:2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு க்களின் பிரகாரம் அத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு கடமைகள் உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளவதற்கு எதிர்பார்க்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

#### 2.1.1 மதிப்பீடுகள் தயாரிப்பதில் பலவீனங்கள் செலவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவு விடயத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,527,704 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் ஆண்டின் போது சேமிக்கப்பட்டு இருந்தது. | பாதீடு ஆக்கபூர்வ மான முகாமைத் துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவினால் தமது வருடாந்த செலவு மதிப்பீடு சமர்ப்பிக்கப் பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாக இருந்ததுடன் தேர்ச்சி உடைய உத்தியோகத்தர் ஆணைக்குழுவில் காணப்படாமையால் 2018 ஆம் ஆண்டில் கடமையை நிறைவேற்று வதற்கு தேவையான நிதி மதிப்பீடு அந்த உத்தியோகத்தர்களுக்கு முறைப் பிரகாரம் தயாரிக்க முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 13 செலவு விடயங்களின் கீழ் ரூபா 37,627,396 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் ரூபா 18,698,206 தொகை மாத்திரம் செலவிடப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் மீதியாகிய ரூபா 18,929,190 இற்கான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை யால் அவை ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 18 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பாதீடு ஆக்கபூர்வ மான முகாமைத் துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குறைந்த பட்சம் ஒரு முன்னைய ஆண்டிற்காக நிறைவேற்றப்பட்ட கருமங்கள் தொடர்பாக செலவு மதிப்பீடு காணப்பட்டு இருந்தால் இதை விட முறையாக செலவுகளை எதிர்வுகூறி செலவு மதிப்பீடு தயாரிப் பதற்கு அவர்களுக்கு முடியுமாக இருந்தது என நம்புகின்றேன். முன்வரும் ஆண்டுகளில் ஆணைக்குழுவினால் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது இது தொடர்பாக மிகவும் கவனத்துடன் செலவு மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் 2018 ஆண்டிற் காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு இணங்கக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் தேவைகளுக்கு இணங்கக் கூடிய விதமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட வேண்டும். | ஆணைக்குழுவிற்கு 2018 ஆண்டின் போது தனியான தலைப்பு ஒன்றின் கீழ் நிதி ஏற்பாடுகள் வழங்குவதற்கு செயற்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள் வதற்காக தேவையான ஆரம்ப அலுவல்கள் கூடிய விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையாக இருந்த காரணத்தினால் ஏதேனும் குறித்தொதுக்கிய காலப்பகுதியில் நிறை வேற்றிக் கொள்ள வேண்டிய கருமங்களை திட்டமிடு வதற்கு முடியாதிருந்தது. 2018 ஆண்டின் போது நிறைவேற்றிக்கொள்ள |

| | | |
|---|---|---|
| | | வேண்டிய அடிப்படைக் கருமங்கள் தீர்மானிக்கப் பட்டவுடன், அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்காக நேரிட்டது. ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2014.02.17 திகதிய அரச நிதிச்சுற்றறிக்கையின் 01/2014 இற்கு இணங்கி இல்லாத சந்தர்ப்பங்கள் காணப்படுவதை ஏற்றுக் கொள்வதுடன் அந்தக் குறைபாடுகள் 2019 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும். |

### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டத்தின் 32(1)(ஆ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் மேன்முறையீடு கிடைக்கப் பெற்று முப்பது நாட்களுக்குள் கோரிக்கையை உரிய நடவடிக்கைக்காக தகவல் உத்தியோக த்தருக்கு அனுப்ப முடியும். அவ்வாறாயினும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு ஆகும். | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நடைமுறை சாத்தியமாக 30 நாட்களுக்குள் தீர்ப்பு ஒன்று வழங்குதல் கடினமான காரியம் ஆகும். ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து மேன்முறையீடு களும் சட்ட ஏற்பாடுகளுடன் ஆய்வு செய்து ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேன்முறையீட்டு விசாரணைக்காக நாள் குறிப்பிடப்படும். |

| காலப்பகுதி/ ஆண்டு | ஆணைக்குழு விற்கு கிடைத்துள்ள மேன்முறை யீடுகளின் எண்ணிக்கை | 2019.02.28 திகதியில் உள்ளவாறு விசாரணை செய்யப்பட்ட மேன்முறை யீடுகளின் எண்ணிக்கை | விசாரணை செய்யப்பட்ட மேன்முறை யீடுகளில் வெளியிடப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆரம்பம் முதல் 2017.12.31 வரை | 230 | 198 | 198 |
| 2018 | 800 | 549 | 549 |
| 2019.01.01 முதல் | 200 | 22 | 10 |

| | | | |
|---|---|---|---|
| | 2019.02.28 வரை | | |
| (ஆ) | கட்டளை விதிகள் மற்றும் வழிகாட்டல் களை வெளியீடு செய்யும் நோக்கில் 2018 ஆம் ஆண்டின் போது 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை மீதான சட்டத்தின் பிரிவுகள் 41 மற்றும் 42 இன் பிரகாரம் தேவையான சட்டங்கள், பிரமாணங்கள் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஆண்டின் போது சட்டங்கள் அல்லது பிரமாணங்கள் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட வாறு உரிய கருமங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான புதிய சட்டங்கள், பிரமாண ங்கள் ஆக்குவதற்கு அல்லது காணப்படும் சட்டங்கள் பிரமாணங்களில் திருத்தங்களை தேவையான விதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |
| (இ) | பொதுத்துறை ஆவண முகாமைத்துவ த்தை முறைப்படுத்தல் தொடர்பாக ஆணைக்குழுவின் விதிகள், பிரமாணங் கள், வழிகாட்டல்கள், நடவடிக்கை முறைகள் பகிரங்கப்படுத்துவதன் மூலம் ஆவண முகாமைத்துவத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது பொது அதிகார சபைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், ஆவண முகாமைத்துவ தீர்மானங்கள் பொது நிர்வாக அமைச்சு மற்றும் தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன இணைந்து வரைபு தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டி ருந்ததுடன் மற்றும் தற்போது காணப்படும் ஆவண முகாமைத்துவ சட்டங்கள் மற்றும் தொழிநுட்ப முறைகள் தொடர்பாக சட்ட ஆலோசகர்களினால் ஆய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதென கண்டறியப்பட்ட போதிலும் ஆணைக்குழுவினால் உரிய விதிகள், பிரமாணங்கள், வழிகாட்டல்கள், நடவடிக்கை முறைமைகள் என்பன வெளியிட்டு இருக்கவில்லை. | திட்டமிடப்பட்டு ள்ளவாறு உரிய கருமங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். | தீர்மானங்களை தொடர்ந்தும் ஆய்வு செய்து தேவையினை இனங்காணுதல் தற்போது நடைபெறுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கில் 2018 ஆண்டின் போது அந்தத் தகவல்களை வெளிப்படுத்தும் உள்ளடக்கங்கள் தொடர்பான அறிவுரைகள்/ வழிகாட்டல்கள் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த அறிவுரைகள்/ வழிகாட்டல்களின் செயற்படு தன்மை தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டு ள்ளவாறு உரிய கருமங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். | எதிர்காலத்தில் முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள் வதற்கு மற்றும் உரிய பொது அதிகாரிகளை அறிவுறுத்துவதன் மூலம் அதற்கான முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத் தலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். |
| (உ) | 2018 திசெம்பர் வரை முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்தலை மேம்படுத்தும் குறிக்கோளுடன் அது தொடர்பாக திட்டமிடப்பட்டு குறைந்த நியமங்களை உருவாக்குவற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்தி இருக்கவில்லை. | திட்டமிடப் பட்டுள்ளவாறு, உரிய கருமங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். | எதிர்காலத்தில் முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள் வதற்கு மற்றும் உரிய பொது அதிகாரிகளை அறிவுறுத்துவதன் மூலம் அதற்கான முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்து வதற்கு மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். |
| (ஊ) | பொதுத்துறை அமைச்சுக்கள், திணைக் களங்கள் மற்றும் நிறுவனங்களின் இணையத்தளங்கள் மூலம் முற்போக்குத் தகவல்களை வெளியிடுதலை முன்னேற்றும் குறிக்கோளுடன் 2018 திசெம்பர் அளவில் இணையத்தள கணிப்பீடு மேற்கொள்ளல் மற்றும் நாளது வரை ஆக்குவதற்கான அறிவுரைகள் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படுத்தப் பட்டு உரிய தொடர் நடவடிக்கை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப் பட்டுள்ளவாறு, உரிய கருமங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். | எதிர்காலத்தில் முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள் வதற்கு மற்றும் உரிய பொது அதிகாரிகளை அறிவுறுத்துவதன் மூலம் அதற்கான முற்போக்குத் தகவல்கள் வெளிப்படுத்து வதற்கு மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் போது ஆணைக் குழுவினால் வெளியிடப்பட வேண்டிய வெளியீடுகளின் செலவுகளை தீர்ப்ப தற்காக ரூபா 1,500,000 இற்கான வெளிநாட்டு மானியத்தின் கீழ் ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும், அவற்றை உரிய செயற்திட்டங் களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டங் களுக்கான நிதி ஏற்பாடுகள் உரிய குறிக்கோள் களுக்காக விரைவாக ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஆணைக்குழுவினால் வெளியிடப்பட வேண்டிய சில வெளியீடுகளின் செலவுகளை தீர்ப்பதற்காக ரூபா 1,500,000 இற்கான ஏற்பாடு 2018 ஆண்டின் போது கிடைத்திருந்த போதிலும், அந்தக் கிரந்தங்களின் மொழி பெயர்ப்பு அலுவல்கள் மற்றும் வள பங்களிப்புக் கடிதம் கிடைப்பதில் தாமதத்தின் காரணமாக 12/31 திகதிக்கு முன்னர் அச்சிடுவதற்கு முடியாது இருந்தது. |

### 3.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| சட்டத்தின் பிரிவு 37(1) இன் பிரகாரம், ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு குறைந்த பட்சம் ஒரு அறிக்கையேனும் தயாரிக்கக் கூடிய விதமாக, ஆணைக் குழுவினால் அதன் அலுவல்கள் தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப் பட்டு பிரதிகள் ஆணைக்குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக் குழு 2016 ஆண்டிற்காக அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஆணைக்குழு 2016 ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தனால் 2016 ஆம் ஆண்டிற் காக விஷேட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கு சேவை செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1.2 மில்லியன் ஏற்பாடுகளின் மீது கிராமிய மற்றும் கடின பிரதேசங்களின் பொது மக்களை அறிவுறுத்தும் குறிக்கோளுடன் தெரிவு செய்யப்பட்ட 8 பிரதேசங் களில் சமூக அமைப்புக்களுடன் ஒரு நாள் கலந்துரையாடல் நடாத்து வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 2019 மார்ச் வரை மூன்று நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட் டுள்ளவாறு விளிப்பூட்டுதல் மேற்கொள்ளப்ப ட வேண்டும். | இந்த செயற் திட்டம் 2018 மே 01 ஆம் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 30 திகதி வரை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த செயற்திட்டம் ஆகும். நிதி ஏற்பாடுகள் கிடைத்ததும் மீதி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40(1) பிரகாரம், நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள் வதற்காக அந்த நிறுவனத்தின் நிர்வாகச் சபையினால் உரிய முறையில் நியமனம் செய்யப் படுகின்ற தனக்கான உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டியிருந்ததுடன், ஆணைக் குழுவினால் இது வரை உள்ளகக் கணக்காய்வாளர் நியமனம் செய்திருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் நியமனம் செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 41(1) பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யும் நிறுவனங்களுக்குமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது உரிய நிர்வாக சபையினால் தமக்கு உதவி செய்வதற்காக நியமனம் செய்யப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று இருக்க வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் அவ்வாறான குழு ஒன்று நியமனம் செய்திருக் காமையால் நிறுவனத்தின் செயற்பாடுகள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு மேற் கொள்ளல் நடைபெற்றிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிர்வாக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று நியமனம் செய்ய வேண்டும். | வெகுசன ஊடக அமைச்சின் கீழ் காணப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கீழ் ஆணைக் குழுவின் அலுவல்கள் மீளாய்வு செய்தல் பொருத்தம் எனின் அவ்வாறு செய்வதற்கும் அவ்வாறு அன்றேல் அவ்வாறான குழு ஒன்று அந்த அமைச்சின் பிரதான கணக்காளரின் பங்குபற்றலுடன் நிறுவுவதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

**5.1 ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி**

ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணி தொடர்பான அவதானிப்புக்கள் கீழ்வருமாறு ஆகும்.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டத்தின் பிரிவு 13(1)(அ) பிரகாரம், ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகப் பதவி 2019 பெப்ரவரி முதல் கணக்காய்வுத் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டது. | ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடம் கூடிய விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2019.06.04 திகதி பணிப்பாளர் நாயகக் பதவிக்காக ஆட் சேர்ப்பதற்கு உரிய நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக் குழுவிற்கான கணக்காளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காத துடன் கணக்காய்வுத் திகதி வரை நிதி உத்தியோகத்தர் ஒருவரின் மூலம் நிதிசார் நிர்வாக அலுவல்கள் மற்றும் கணக்குகள் தயாரித்தல் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | ஆணைக் குழுவிற்கு உரிய கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட வேண்டும். | தற்போது கணக்காளர் பதவி ஒன்றிற்கான அங்கீகாரம் பெறுவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடம் அங்கீகாரத்தை பெறுவதற்காக கடிதம் ஒன்று தயாரிக்கப்படு கின்றன. |
| (இ) | 2019 மே 22 திகதி அளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | பதவி வெற்றிடங் களை நிரப்பப்பட வேண்டும். | ஆய்வு உத்தியோகத்தர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையும் விரைவாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. அதே போல் 2018.12.31 திகதி வெற்றிடமாக காணப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக தற்போது ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>முகாமைத்துவ உதவியாளர், சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு அலுவல்கள் இவ்வருடத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஆணைக் குழுவின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக 2016 ஒப்தோபர் 20 திகதி 60 வயதிற்கு கூடிய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.<br>எவ்வாறாயினும், 09/2007(1) ஆம் இலக்கங் கொண்ட 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை யின் (ii) பிரகாரம் பதிலாளர் ஒருவர் நியமனம் செய்தல் முடியாத போதிலும், பதில் கடமை போன்ற மாற்று செயற்பாடுகளின் மூலம் தற்போது கடமையில் உள்ள உத்தியோகத்தர் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடியாத போதிலும், அமைச்சுச் செயலாளரின்/ திணைக்களத் தலைவரின் தனிப்பட்ட பரிந்துரையின் மீது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 12 மாத | சுற்றறிக்கை ஏற்பாடு களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்வதற்கு ஏற்ற காலம் இன்மையின் காரணமாக மற்றும் ஆணைக் குழுவின் எதிர்கால நடவடிக்கை மேற்கொள் வதற்காக நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்தல் அத்தியவசிய விடயம் ஒன்றாக இருந்தத னால் இந்த நிறுவனத்தின் நியமன அதிகாரியாகிய ஆணைக் குழுவின் அங்கீகாரத்தின் மீது உரிய தகைமைகளை நிறைவேற்றிய ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார்.<br>இரண்டாவது வருடம் இறுதி வரை மாத்திரம் அந்த உத்தியோகத்தர் சேவையில் ஈடுபட்டார். |

| | | | |
|---|---|---|---|
| | உச்ச அளவுக்கு நியமனம் செய்ய முடியும் எனினும் இந்த நிர்வாக உத்தியோகத்தர் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அதாவது சுமார் 2 வருட காலத்திற்காக ரூபா 89,121 இற்கான கொடுப்பனவின் மீது இடையறாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | | |
| (உ) | முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம் அல்லாத) சேவை வகையைச் சேர்ந்த அங்கீரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி க.பொ.த. (சா.தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 06 பாடங்களில் சித்தியடைய வேண்டியிருந்ததுடன் அந்த தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத இரண்டு உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆணைக் குழுவின் ஆரம்பம் முதல் கடமையில் ஈடுபட்டி ருந்த இந்த பெண் உத்தியோகத்தர் இருவரும் தகைமைகளை பூர்த்தி செய்யாமையின் காரணமாக சேவையில் இருந்து நீக்குதல் மனிதநேய அடிப்படையில் கவனம் செலுத்தும் போது பொருத்தம் இல்லாததால் அந்த தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் சேவையை நிரந்தரப்படுத்தும் அடிப்படை யில் இது வரை சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். |